# Centre for Research on the Economics of Ageing

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY

NEWSLETTER - ISSUE 2 JUNE 2016



## சிங்கப்பூரர்கள் பணி ஓய்வு பெறுவதற்குப் பொருளாதார ரீதியாக தயார் நிலையில் இருக்கிறார்களா?

ஓய்வுகால நிறைவளவு மற்றும் குடியிருப்பு, மத்திய சேம நிதி (மசேநி), சுகாதாரம் மற்றும் சுகாதாரப் பராமரிப்புச் செலவினங்கள் மற்றும் தொழிலாளர் அணி பங்கேற்பு போன்ற அதன் பங்களிக்கின்ற காரணிகளுக்கான குறிப்பிட்ட குறிப்பாதாரத்துடன் சிங்கப்பூரில் முதுமையடையும் மக்கள் குறித்த ஒரு நீண்டகால ஆய்வை நடத்துவதே முதுமைக்கால பொருளாதார நிலை குறித்த ஆராய்ச்சி நிலையத்தின் (CREA) முதன்மையான குறிக்கோளாகும். சமூக நலவாழ்வு, முதுமை மருத்துவம் (முதியோர்களின் சுகாதாரப் பராமரிப்பு), முதுமையியல் (முதுமையடைவதின் சமூக, உளவியல், அறிவுத்திறன் மற்றும் உயிரியல் சார்ந்த அம்சங்கள்) மற்றும் முதுமையடைந்த பணியாளர்களின் பணித் தகுதியாக்கம் போன்ற முதுமையடைதலுக்குத் தொடர்புடைய பிரச்சனைகள் குறித்து சிங்கப்பூரில் நடத்தப்பட்ட மற்ற கருத்தாய்வு ஆராய்ச்சியில் இருந்து CREA மற்றும் சிங்கப்பூர் லைஃப் பேனல்® (SLP) -ஐ இந்த கவனக்குவிப்பு வேறுபடுத்திக்காட்டுகிறது.

ஆகஸ்டு 2015 முதல் மாதந்தோறும் SLP கருத்தாய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கருத்தாய்வுகளை மாதந்தோறும் நடத்துவதில் இரண்டு முக்கிய அனுகூலங்கள் உள்ளன. அதில் ஒன்று, சில நாட்களுக்கு முன்னர் கோரிய தகவல்களைத் துல்லியமாக நினைவுகூர்வதற்குச் சுலபமாக்குகிறது. மக்கள் தங்களுடைய சூழ்நிலைகளில் மாற்றத்தைச் சந்திக்கும் போது (உதாரணமாக, உடல்நலம் தொடர்பானவை அல்லது வேலைவாய்ப்பு அல்லது ஒரு புதிய அரசாங்கக் கொள்கை தொடர்பானவை) அவர்களின் நடவடிக்கை எவ்வாறு மாறுகிறது (குறிப்பாக அவர்கள் செலவு செய்யும் முறைகள்) என்பதை நம்மால் அடையாளம் காண முடிவது மற்றொரு அனுகூலமாகும்.

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

உங்களுடைய கருத்துக்களும் பின்னூட்டமும் எங்களுக்கு மிகவும் மதிப்புமிக்கவை. அனைத்து விசாரணைகளுக்கும் பதிலளிக்க நாங்கள் இயன்ற அளவு சிறப்பாகச் செயல்படுகிறோம். எங்களுடைய செய்திக்கடிதங்களில், எங்கள் பங்கேற்பாளர்களால் அடிக்கடி கேட்கப்படும் சில கேள்விகளை நாங்கள் பகிர்ந்துகொள்வோம்.

### நான் நிறைவுசெய்த மற்ற கருத்தாய்வுகளைக் காட்டிலும் ஜனவரி மாதக் கருத்தாய்வு ஏன் மிக நீண்டதாக இருந்தது?

சிங்கப்பூரர் குடும்பங்கள் தங்களுடைய பணி ஓய்வுக்காக பொருளாதார ரீதியாக எந்தளவிற்குத் தயார்நிலையில் உள்ளனர் என்பதைக் கண்டறிவதே எங்களுடைய ஆராய்ச்சி ஆய்வின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாகும். அதன் காரணமாகத் தான் நாங்கள் சிங்கப்பூரர் குடும்பங்களுடைய சொத்துக்களின் இருப்புக்கணக்கை அறிவதற்கு ஜனவரி மாதக் கருத்தாய்வில் ஒரு சிறப்புப் பகுதியைச் சேர்த்தோம். அதுவே மற்ற மாதங்களைக் காட்டிலும் ஜனவரி மாதக் கருத்தாய்வு மிக நீண்டதாக இருந்ததற்கு முக்கியக் காரணமாகும். இந்தப் பகுதி குறிப்பாக இரண்டு காரணங்களுக்காக விரிவாகக் கூறப்பட்டது. முதலாவதாக, பெரும்பாலான மக்களுக்குத் தங்கள் சொத்துக்களின் ஆகமொத்த மதிப்பைக் கணக்கிடுவது சிரமமாகும். இந்தத் தகவல்களைத் துல்லியமாக உருவாக்குவதற்கு, ஒவ்வொரு பாகத்தையும் ஆராய்வது உதவுகிறது. இரண்டாவதாக, குடும்பங்களின் சொத்துக்களில் உள்ளடங்கியுள்ளவை நமது ஆய்வுக்கு மிகவும் முக்கியமானவை. உதாரணமாக, மசேநி சேமிப்புகள் தேவைக்குக் குறைவாக உள்ளதா, உங்களின் அன்றாடத் தேவைகளுக்குப் பணமளிக்க நீங்கள் வேறு ரொக்கமாக்கக்கூடிய சொத்துக்களை வைத்திருக்கிறீர்களா, அல்லது வாழ்க்கையை நடத்துவதற்கு உங்கள் குடும்பம் ஒரு சிறு தொழிலை நடத்துகிறதா மற்றும் இது போன்ற விவரங்களை நாங்கள் அறிய வேண்டியுள்ளது.

### சில கருத்தாய்வுக் கேள்விகள் ஏன் மற்றவற்றைக் காட்டிலும் அடிக்கடி கேட்கப்படுகின்றன?

உடல்நலம், குடும்ப உறுப்பினர்கள், திருமண நிலை, வேலைவாய்ப்பு, வருமானம் மற்றும் செலவினம் குறித்த ஒரு மையக் கேள்வித் தொகுப்பை

SLP மாதாந்தரக் கருத்தாய்வுகள் வழக்கமாக உள்ளடக்குகின்றன. குடும்பங்கள் செலவிடும் தொகைகள் மற்றும் எதற்காக அவர்கள் செலவு செய்கிறார்கள் என்பது வேலைவாய்ப்பின்மை, ஒரு உடல்நலப் பிரச்சனையின் நோயறிதல் அல்லது உடல்நலக் காப்பீட்டின் இழப்பு (அல்லது நேர்மறையான காரணங்கள்: ஒரு வேலையைக் கண்டறிதல், உடல்நலக் காப்பீட்டை வாங்குதல், முதலானவை) போன்ற நிகழ்ந்திருக்கக்கூடிய நிகழ்வுகளின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் மாறுபடலாம் என்பதால், ஒவ்வொரு கருத்தாய்விலும் செலவழித்தல் தொடர்பான கேள்விகள் கேட்கப்படுகின்றன. மக்கள் தங்களுடைய சூழ்நிலைக்கு ஏற்ப அத்தகைய நிகழ்வுகளுக்கு எவ்வாறு பதில்வினையாற்றினார்கள் என்பதை அறிந்துகொள்வது, எதிர்காலத்தில் அத்தகைய மாற்றங்களின் விளைவுகளையும், கொள்கைகள் இறுதிவிளைவுகளை மேம்படுத்த இயலும் வழியையும் தீர்மானிப்பதற்கு எங்களை அனுமதிக்கும். ஜனவரி மாதக் கருத்தாய்வில் கேட்கப்பட்டதைப் போன்ற சொத்துக்கள், கடப்பாடுகள், குடியிருப்பு மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்தக் கேள்விகள் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே கேட்கப்படுகின்றன. ஏனெனில், அவை பெரும்பாலும் மாதாமாதம் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றமடைவதில்லை. ஒத்தக் காரணங்களுக்காக, மெடிஷீல்டு காப்பீடு, அறிவுத்திறன், சுயமாகத் தரமிடப்பட்ட உடல்நலம் அல்லது கையிருப்பில் உள்ள பங்குகள் போன்ற பிற கேள்விகள் காலாண்டுதோறும் கேட்கப்படுகின்றன.

## தரவுப் பகுப்பாய்வின் குறுந்தொகுப்பு

இதுவரையில் நீங்கள் கருத்தாய்வுக்காக அளித்த பதில்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட சில ஆர்வந்தரும் புள்ளிவிவரங்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன:

### 10ல் 1

இது தங்களுடைய முதுமைக் காலத்திற்கான தங்கள் பொருளாதாரத் தயார்நிலையை “மிகச் சிறப்பு” அல்லது “மிக நன்று” என்று தரமிட்ட 50 முதல் 59 வயது பதிலளிப்பாளர்களின் எண்ணிக்கையாகும்



### 3ல் 2

இது தங்களுடைய முதுமைக் காலத்திற்கான தங்கள் பொருளாதாரத் தயார்நிலையை “மோசமில்லை” அல்லது “மோசம்” என்று தரமிட்ட 50 முதல் 59 வயது பதிலளிப்பாளர்களின் எண்ணிக்கையாகும்

### 3 x

இது, மோசமான உடல்நலத்தைக் கொண்டிருக்கும் பதிலளிப்பாளர்கள் நல்ல உடல்நலத்தைக் கொண்டிருப்பவர்களுடன் ஒப்பிடுகையில், எவ்வளவு அடிக்கடி தங்களின் முதுமைக் காலத்திற்கான தங்கள் பொருளாதாரத் தயார்நிலையை “மோசமில்லை” அல்லது “மோசம்” என்று தரமிடுகின்றனர் என்ற அளவீடாகும்.



### 69%

தங்கள் வாழ்க்கையில் முழுத் திருப்தியடைந்துள்ளதாகத் தெரிவித்த பதிலளிப்பாளர்களின் சதமானம். எனினும், பதிலளிப்பாளர் மோசமான உடல்நலத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தால், இந்த எண்ணிக்கை பாதியாகக் குறைகிறது.

### 20%

தங்கள் குடும்பத்திற்கு வெளியே வாழும் மக்களுக்கு உதவ, ஒவ்வொரு மாதமும் $500 -க்கும் அதிகமாகத் தருவதாக தெரிவிக்கும் பதிலளிப்பாளர்களின் சதமானம். இத்தகைய பணமளிப்புகளுக்கும், பதிலளிப்பாளர்கள் பெற்றோர்களைக் கொண்டிருக்கிறார்களா என்பதற்கும் இடையே ஒரு வலிமையான ஒட்டுறவை முன்னோட்டமானப் பகுப்பாய்வு தெரிவிக்கிறது.



### 3ல் 1

கூறிய ஏதேனும் மாதத்தில் மருத்து வரிடம் சென்ற பதிலளிப்பாளர்களின் எண்ணிக்கை. இவற்றில், மூன்றில் இரண்டு பேர் அதைத் தொடர்ந்த மாதத்தில் மீண்டும் மருத்துவரைச் சந்தித்தனர். கூடுதலாக, நாள்பட்ட நோய் நிலைமைகளைக் கொண்டிருப்பவர்கள் மருத்துவரைக் காணப் பதிவுசெய்வதற்கு வாய்ப்புள்ளதால், அவர்களின் எண்ணிக்கை இருமடங்காகும்.

### 26%

எதிர்காலத்தில் ஒரு தாதிமை இல்லத்தில் சேர்க்கப்படுவதற்கு பதிலளிப்பாளர்களுக்கு உள்ள சராசரி அகநிலை நிகழ்வாய்ப்பு. மேலும், சில குழந்தை பதிலளிப்பாளர்கள் ஒரு தாதிமை இல்லத்தில் சேர்க்கப்படுவதற்கான தங்கள் வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாகத் தரமிடுகின்றனர்.

## இரகசியக்காப்பு மற்றும் உங்கள் தனியுரிமை

நீங்கள் எங்களிடம் வழங்குகின்ற தகவல்களை நாங்கள் கடும் இரகசியமானதாகக் கருதி பாதுகாப்போம் மற்றும் சிங்கப்பூர் தனிநபர் தகவல் பாதுகாப்பு ஆணையத்தின் சட்டத்திட்டங்களின் கீழ், தனிநபர் தகவல் பாதுகாப்புச் சட்டம் 2012 (PDPA) உடன் முழுமையாக இணங்கி நடப்போம். எங்களுடைய சர்வர்கள் மற்றும் இணையத்தள உலாவிகளுக்கு இடையிலான தரவுப் பரிமாற்றங்கள், உயர் பாதுகாப்பைக் கொண்ட புரொட்டகால்களைப் பயன்படுத்திக் கையாளப்படுகின்றன. மேலும், எங்களுடைய டொமைனில் ஒரு SSL சான்றளிப்பு நிறுவப்பட்டுள்ளது. உங்களின் தனிப்பட்ட தரவுகள் மற்றும் கருத்தாய்வு பதில்கள் தனிப்பட்ட சர்வர்களில் வைக்கப்படுகின்றன. நீங்கள் அளிக்கும் தரவுகளைக் கொண்டு உங்களைக் கண்டுபிடிக்க முடியாது என்பதே இதன் பொருளாகும். அடையாளம் நீக்கப்பட்ட தரவுகளின் மீது மட்டுமே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அவை ஆராய்ச்சி நோக்கங்களுக்காக மட்டுமே

எப்பொழுதும் பயன்படுத்தப்படுகின்றன. அவை ஒன்றுதிரட்டப்பட்ட வடிவத்தில் மற்றும் SMU ஆமோதித்த ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமே கிடைக்கின்றன. சேகரிக்கப்பட்ட முடிவுகள் எப்பொழுதும் ஒரு புள்ளிவிவரமாகவே அறிக்கை அளிக்கப்படுகின்றன. வணிக நோக்கங்களுக்காக உங்கள் விவரங்களை மற்ற அமைப்புகளுக்கு நாங்கள் ஒருபோதும் அனுப்பிவைக்க மாட்டோம்.

## எதிர்வரும் கருத்தாய்வுகளின் தேதிகள்

- ஜூன் மாதக் கருத்தாய்வு: **1 - 19 ஜூன், 2016**
- ஜூலை மாதக் கருத்தாய்வு: **1 - 24 ஜூலை, 2016**
- ஆகஸ்டு மாதக் கருத்தாய்வு: **1 - 21 ஆகஸ்டு, 2016**

கருத்தாய்வை நிறைவுசெய்வதற்கு உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், ஒரு கைக்கணினியில் (டேப்ளட்) கருத்தாய்வை நிறைவுசெய்ய உங்களுக்கு உதவுவதற்கு, நாங்கள் ஒரு பொது நூலகத்திலோ அல்லது சமூக மன்றத்திலோ உங்களைச் சந்திப்பதற்கு மகிழ்ச்சியடைவோம். இத்தகைய அமர்வுகள் வழக்கமாக ஒவ்வொரு கருத்தாய்வின் இறுதி வாரத்தில் நிகழும்.



## எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை நீங்கள் மாற்றியிருந்தால், கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் வடிவத்தில் உதவி தேவையென்றால், அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ, கருத்துக்களோ இருந்தால், தயவுசெய்து **6808 7910** என்ற எங்களுடைய மையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுங்கள் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது **slp@smu.edu.sg** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்பதற்கு நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறோம்.

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY